IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.
RANIPET DISTRICT.

DEPOSITION OF WITNESS
SC.No. 43/2025 - PW-9

| | |
|---|---|
| Name | திரு.சொக்கநாதன் |
| Husband/Father Name | உமாபதி |
| Village /Area | வேலூர் |
| Taluk | வேலூர் |
| Occupation | அறிவியல் அலுவலர் |
| Age | 47 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 15.07.2026.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது இயங்கும் அறிவியல் தடவியல் ஆய்வகம் வேலூரில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.09.2023 அன்று நான் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியிலிருந்த போது அரக்கோணம் கிராமிய காவல் நிலைய குற்ற எண்.337/2023 வழக்கில் இறந்து போன விக்னேஷ் ஆண் வயது.23 என்பவரது உடல் உள்ளுறுப்புகளான இறைப்பை, சிறுகுடல், கல்லீரல் மற்றும் சிறுநீரகம், மூளை, ரத்தம் மற்றும் பாதுகாப்பு திரவம் ஆகியன பேராசியர் சட்டம் சார்ந்த மருத்துவம் வேலூர் அரசு கல்லூரி மருத்துவமனை அவர்களின் கடிதத்துடனும் சரியான முத்திரையுடனும் ஆய்வகத்தில் பெறப்பட்டன. மேற்படி உடல் உள்ளுறுப்புகளை பகுப்பாய்வு செய்ததில் அவற்றில் இரைப்பையில் 679 மில்லிகிராம் Ethyl Alcohol–ம் சிறுகுடலில் 483 மில்லிகிராம் Ethyl Alcohol–ம் கல்லீரல் மற்றும் சிறுநீரகத்திலும் 291 மில்லிகிராம் Ethyl Alcohol–ம் மூளையில் 215 மில்லிகிராம் Ethyl Alcohol–ம் ரத்தத்தில் 166 மில்லிகிராம் Ethyl Alcohol–ம் கலந்திருந்தது. மேற்படி உள்ளுறுப்புகளில் நச்சு பொருள் எதுவும் காணப்படவில்லை. பாதுகாப்பு திரவத்தில் Ethyl Alcohol அல்லது வேறு எந்த நச்சு பொருளும் காணப்படவில்லை. இதனை ஆய்வு அறிக்கையாக தயாரித்து ஆய்வக நஞ்சியல் எண்.1246/2023, நாள்.22.09.2023 மூலம் அறிக்கையாக

வழங்கினேன். அந்த நஞ்சியல் ஆய்வு அறிக்கை **அ.த.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக அரக்கோணம் தாலுக்கா காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இறந்த நபர் இறப்பதற்கு எத்தனை மணி நேரத்திற்கு முன்பு மது அருந்தி இருக்கலாம் என்று கேட்டால் அதை மருத்துவர் தான் கூற முடியும்.

மேற்படி உள்ளுறுப்புகளிலுள்ள மதுவினுடைய அளவை பற்றி போலீஸ் விசாரணையின் போது நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.07.15 19:20:49 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.